**குளியாப்பிட்டி நகர சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குளியாப்பிட்டி நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ரூபா 528,635 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்களின் கொள்வனவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குளியாப்பிட்டி பஸ் நிலையத்தில் 2 கடைகளுக்காக 2013 நவம்பர் முதல் 2016 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய ரூபா 334,400 தொகையான கடை வாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 31,687,881 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77,967,859 தொகையான பெறவேண்டிய வருமானக் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

i. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்களை விஞ்சிய மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களில் ரூபா 4,062,821 இனால் தீர்க்கப்படக்கூடிய மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,776,729 ஆகும்.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களில் நிறுவனத்தின் பெயர் மற்றும் அரசாங்க இலட்சணை பொறிக்கப்பட்டிராமை. |
| (ii) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | சாரதி மற்றும் 07 கனிஷ்ட ஊழியர்களுக்கு ரூபா 28,000 கூட்டுத்தொகையான உத்தியோகபூர்வ சீருடைப் படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊழியர்கள் உத்தியோகபூர்வ சீருடையணிந்து கடமைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,548,493 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,770,479 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 32,778,014 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானம் ரூபா 36,358,643 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 71 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 45 மில்லியனாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 18 மில்லியன் தொகையான நிலுவை வருமானம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 38 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(இ) ரூபா 10,877,912 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட வாடகை வருமானத்திலிருந்து ரூபா 8,731,763 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 25,559,220 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட ஏனைய வருமானங்களிலிருந்து ரூபா 11,298,712 தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட புதிய நிர்மாணங்களுக்கான மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கெமா சந்தைத் தொகுதியின் தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட 84 கடைகளில் 2016 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,285,262 தொகையான ஆதனவரி மீதியில் ரூபா 2,115,892 தொகை அரசாங்கத்தின் ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,825,000 தொகையான 03 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதாரப் பிரிவின் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 181 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள காணியை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குளியாப்பிட்டி பொதுச் சந்தையில் 04 கடைகள் முன்னைய ஆண்டின் போது பெற்றிருந்த வாடகையாளருக்கு அந்த ஆண்டின் கூறுவிலையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு வழங்கப்பட்டதால் போட்டியாளர்களின் அடிப்படையில் சபைக்கு வருமானத்தை உழைப்பதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

(ஆ) குளியாப்பிட்டி பேருந்து நிலையத்தில் 02 கடைகள் வடமேல் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2013 ஆம் ஆண்டு முதல் வாடகை செலுத்தாமல் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை ரூபா 334,400 ஆகும்.

### 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் செயற்பாடற்ற நிலைக்கு உட்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்றின் அடிப்படையில் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,899,005 செலவில் கொங்கிரீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட எஸ்ஸெத்தும கலஹிட்டியாவ வீதியின் பாலம் மற்றும் வீதி தொடர்புபடும் இடத்தின் வீதி 45 அடி அளவிலான தூரம் கொங்கிரீட் இடப்பட்டிருக்கவில்லை. வீதியின் பாலம் அருகிலிருந்து முதல் 30 மீற்றரைப் பரீட்சித்த போது கொங்கிரீட் தட்டிகள் 06 இடங்களில் 1.3 மீற்றர் முதல் 10 மீற்றர் வரையான நீளத்தில் வெடித்திருந்தமை, மேலும் 30 மீற்றரில் அமைந்துள்ள 04 மதகு மூடிகள் வெடித்திருந்தமை மற்றும் மேலும் 30 மீற்றரில் வீதியில் குழிகள் ஏற்பட்டிருந்தமை எனின் 2017 சனவரி 20 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) குளியாப்பிட்டி வாராந்த சந்தைவளவில் ரூபா 938,870 செலவில் இரண்டு அலுவலக அறைகளை நிர்மாணிக்கும் போது பூர்த்தி செய்யப்படாத வேலைப்பகுதிக்காக ரூபா 17,352 தொகையும், உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத 06 வேலை விடயங்களுக்காக ரூபா 97,657 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு பொருத்தமான நிலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாரியளவான கழிவுப் பொருள் அளவொன்று காணப்பட்ட போதிலும், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் கழிவுப்பொருள் வடிக்கும் இயந்திரம் செயற்பாடற்றிருந்தமை என்பவற்றினால் உற்பத்தி நடவடிக்கைகள்ளுக்கு இடையூறாக இருந்தது.

### 3.7 சுற்றாடல் பிரச்சினைகள்

கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் அமைந்துள்ள மாடு அறுவைக் கட்டிடம் மற்றும் பன்றி கொல்லுமிடம் என்பன உடைந்த கட்டிடங்களில் நடாத்தப்பட்டுக் கொண்டிருப்பதுடன், அடுத்தாலுள்ள குளியாப்பிட்டி பல்கலைக்கழகத்தின் விடுதியும் ஆடைத் தொழிற்சாலையும் அமைந்துள்ள நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த போதிலும், மதிலொன்று

நிர்மாணிக்கப்பட்டு இந்தப் பிரதேசம் வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், பன்றி கொல்லப்படும் இடத்தில் கழிவுப்பொருளுடன் நீர் வழிந்தோடிச் செல்வதைத் தடுப்பதற்கேனும் வடிகாணொன்று நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் கொல்வதற்காகக் கொண்வரப்படும் பன்றிகளின் கழிவுகள் கழிவுப் பொருடகள் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையக் காணியில் அசுத்தமாக பரவலாகக் காணப்படும் நிலைமையொன்று காணப்பட்டது. பன்றிகளின் உரோமங்களை அகற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட வெட்டும் கத்தி (பிலேட்) கணிசமான அளவில் நிலம் முழுவதும் விசிறிக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | இறுதியிருப்பு, பேரேட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் களஞ்சியப் பேரேட்டு மீதியுடன் ரூபா 23 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. |
| (ஆ) | கடன்கொடுத்தோர் | நீண்டகாலக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | நிர்மாணங்கள் உரிய நியமத்தில் காணப்படாமை. நிறைவேற்றப்படாத வேலை விடயங்களுக்காக கொடுப்பனவு செய்தமை. |
| (ஈ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | சேதனப் பசளை உற்பத்தியில் குறைபாடு காணப்பட்டமை. |
| (உ) | சுற்றாடல் பிரச்சினை | அருகிலுள்ள சுற்றாடல் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாமல் நடவடிக்கை எடுத்தமை. |